ஒசுலோ, 14.01.2021
4. புதுப்பித்தல்: 21.05.2024

**அழைப்பிதழ்: வாய்மொழி வரலாறு வடிவில் சுய-பதிவுப்படுத்தல்**

அச்சிடப்பட்ட ஆவணங்கள் மற்றும் பிற தொட்டுணரக்கூடிய வரலாற்று ஆவணங்களைச் சேகரித்துப் பேணிப் பாதுகாப்பது ஒரு விடயம். ஆனால் புலம்பெயர் மண்ணில் முதலாம் தலைமுறை தமிழர்கள் மற்றும் இங்கு பிறந்து வளரும் தமிழர்களின் அனுபவங்கள் சிறிய அளவிலேயே எழுத்து வடிவில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில் புலம்பெயர்ந்த முதலாம் தலைமுறை தமிழர்கள் நம்மிடையே இல்லாத காலம் வரும்போது என்ன நடக்கும்? இங்குள்ள ஆரம்பகாலத் தமிழ் சமூகம் எவ்வாறு உருவானது, எவ்வாறு வளர்ந்தது என்பதைப் பற்றிக் கூற முடியுமா? அவர்களின் நினைவுகளையும் அனுபவங்களையும் சேமிக்கும் களஞ்சியம் புலம்பெயர் தமிழருக்கு தேவையானதொன்றாக உள்ளது.

இவர்களில் நீங்களும் ஒருவர். நீங்கள் கடந்து  வந்த பாதையில் சந்தித்த அனுபவங்களை கூறுவீர்கள் என்று நம்புகிறேன். உங்கள் கதை தனித்துவமானது. அதை நீங்கள் மட்டுமே கூற முடியும். அதே நேரத்தில், உங்கள் வாய்மொழி வரலாறு புலம்பெயர் தமிழர்களின் பொது வரலாற்றுச் சொத்தாக அமையும்.

**செயல்முறை**

நீங்கள் இந்த அழைப்பை ஏற்றுக்கொண்டால், எங்களுக்கு ஒரு தகவலை அனுப்புங்கள். நாங்கள் உங்களுக்கு ஒரு நேர்காணல் வழிகாட்டி மற்றும் ஒப்புதல் படிவத்தை அனுப்புவோம், அதை நீங்கள் உங்கள் உற்றார், குடும்ப உறுப்பினர்கள், நண்பர்களை நேர்காணல் செய்ய பயன்படுத்தலாம். வாய்மொழி வரலாற்றை நம்பகத்தன்மையான வடிவில் பேணிப் பாதுகாப்பதற்கான சிறந்த வழி ஒரு ஒலி/ ஒளிப் பதிவாக இருக்கும். அதற்காகவே, உங்கள் வாய்மொழி வரலாறு நேர்காணலை ஒலி/ ஒளி வடிவில் பதிவு செய்யுங்கள்.

அடிப்படையில், நேர்காணல் வழிகாட்டி கொண்டுள்ள உள்ளடக்கம்::

- நீங்கள் உங்கள் சொந்த நாட்டை விட்டு புலம்பெயர்வதற்கு முன்னர் உங்கள் வாழ்க்கை எவ்வாறு இருந்தது?
- நீங்கள் புலம்பெயர்ந்ததற்கான காரணம், புலம்பெயர் நாட்டுடனான முதற்சந்திப்பு எவ்வாறு இருந்தது?
- புலத்தில் உங்களைச் சுற்றி இருந்த தமிழ் தொடர்பாடல்கள் (வலைப்பின்னல்) எவ்வாறு இருந்தன?
- தமிழ் அடையாளம், மொழி, பண்பாடு ஆகியவற்றை எவ்வாறு பேணிப் பாதுகாத்தீர்கள்?
- புலம்பெயர் நாட்டின் பெரும் சமூகத்துடனான உறவு எவ்வாறு இருந்து வந்துள்ளது? அதோடு இணைவாக்கச் (integration) செயல்முறை எவ்வாறு இருந்தது?
- உங்கள் சொந்த நாட்டுடனான தொடர்பு எவ்வாறு இருந்து வந்துள்ளது?
- தமிழரின் விடுதலைப் போராட்டம் குறித்த உங்கள் எண்ணங்கள் என்ன?

**தனிமனித உரிமை மற்றும் பாதுகாப்பு**

வரலாற்றைச் சொல்பவர் எந்தெந்த விடயங்களைப் பற்றிக் கூற விரும்புகிறார் மற்றும் அவற்றை எந்த ஆழவில் கூற விரும்புகிறார் என்பதை அவரே தீர்மானிக்கலாம். பதிவு செய்யப்பட்ட ஒலி/ ஒளிப்

பதிவையும் அவர் கேட்க வேண்டும். ஒலி/ ஒளிப் பதிவில் நீக்க வெண்டிய பகுதிகள் இருந்தால், அவற்றை நீக்க வேண்டும். இறுதியாக, அவரின் ஒப்புதல் பெற்றபின்னரே இறுதி ஒலி/ ஒளிக் கோப்பு சுவடியாக் காப்பகப்படுத்தப்பட்டு பொதுப் பாவனைக்கு விட வேண்டும்.

நீங்கள் ஒரு சுவடிக் காப்பக நிறுவனத்திலோ அல்லது புலம்பெயர் தமிழ் சுவடிகள் காப்பகம் (DiasporA Tamil Archives) போன்ற சமூகக்குழுச் சுவடிகள் காப்பகத்திலோ வாய்மொழி வரலாற்றைக் காப்பகப்படுத்தி, பொதுப் பாவனைக்குக் கிடைக்கச் செய்யலாம்.

நேர்காணல் முதல் காப்பகப்படுத்தல் வரையிலான முழுச் செயற்பாட்டிலும், பேணிப்பாதுகாத்தல் (oppbe-varing), பொதுப் பயன்பாடு (offentliggjøring), தனிமனித உரிமை (personvern) என்பன நோர்வேயியச் சட்ட விதிமுறைகளுக்கு இணங்க நடைபெற வேண்டும். நேர்காணல்கள் காண்பவர் மற்றும் வரலாற்றைக் கூறுபவர் ஒரு சட்டரீதியிலான ஒப்புதல் அறிக்கையில் கையொப்பமிடுவதன் மூலம் உங்களில் ஒப்புதல் எமக்குக் கிடைக்கும். இந்த ஒப்புதல் அறிக்கைகளில் கையொப்பமிடுவதன் மூலம் உங்கள் ஒலி/ ஒளிக் கோப்புகளை எவ்வாறு பயன்படுத்த முடியும் என்பதை பாதுகாப்புடன் உறுதி செய்ய முடியும்.

வாய்மொழி வரலாற்றை பதிவு செய்ய நீங்கள் பங்களிப்பீர்கள் என்று நம்புகிறோம். அதன் மூலம் உங்களின் வரலாறு எமது புலம்பெயர் தமிழ் பொது வரலாற்றிலும் நோர்வேயின் வரலாற்றிலும் ஒரு அங்கமாக இணையும். அத்தோடு அது வருங்கால சந்ததியினரின் நலனுக்காகவும், அதில் ஆர்வமுள்ள அனைவரின் பயனுக்கும் வலுச்சேர்க்கும்.